தற்போது நிருவகிக்கப்பட்டு வரும் பணியாகும். இந்தத் திட்டத்திற்காக முதலீடு செய்த இந்தச் சாலையின் உரிமையாளர்களான நிறுவனங்கள் இந்தச் சாலையைப் பயன்படுத்துகிற வாகன உபயோகிப்பவரிடமிருந்து கட்டணமாகப் பெறுவது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறையே ஆகும். அதுபோலவே நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக மும்பை-பூனா நவீனப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை, வதோதரா-கலோல் நவீனப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை ஆகியவை உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் கோயம்புத்தூர் புறவழி நெடுஞ்சாலை. . . .

திரு. சி. ஞானசேகரன்: திரு. சந்தானம் கேட்டது கட்டடங்கள் பற்றி, அமைச்சர் சொல்வது சாலை பற்றி. நான்கூட இதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம். இப்போது கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கேட்கிறார்கள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இன்றைய இந்து பேப்பரில் சாலையைப் பற்றித்தான் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம். திரு. ஞானசேகரன், என்ன வேண்டும் கேளுங்கள்.

(ஆ) கோவையில் நடந்த கொலை சம்பவங்கள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களுடைய அறையில் பல நாட்களாக ஏற்கெனவே கோவையிலே நடந்த சுல்தானுடைய கொலை பற்றியும், முருகேசனுடைய கொலை பற்றியும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. பரிதி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

2002 ஏப்ரல் 3] [பேரவைத் தலைவர்]

அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

*திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து 2, 3 நாட்களுக்கு முன்பே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உண்டியல் திருட்டு தானே? (குறுக்கீடு) அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன். திரு. ஜெ. அன்பழகன் (குறுக்கீடு) திரு. அன்பழகன் சொல்லுங்கள்.....

திரு. பரிதி இளம்வழுதி: நான் கொடுத்து 2, 3, நாட்கள் ஆகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. தாங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. உட்காருங்கள்.

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதிகமான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இன்று 'இந்து' நாளிதழில் சாலை பற்றிய விவரங்கள் செய்தியாக வந்ததால் இந்த விவர அறிக்கையை நான் தெரிவித்தேன். கட்டடங்கள் பற்றிய விவர அறிக்கை வந்தவுடன் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனியில் பட்டப் பகலில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன், அது நடைபெற்ற செய்தி, அதைக் கொடுத்திருக்கிறீர்கள். அறைக்கு வாருங்கள். விளக்கம் தருகிறேன். திரு. இரா. திருமாவளவன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS